# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 11/2023

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. திபாகர் பைதியா | | |
| த/பெ. | குணாதர் பைதியா | வட்டம் | மேற்கு வங்காளம் |
| கிராமம் | மதுசூதன்பூர் | வயது | 48 |
| தொழில் | ஓய்வு | மாவட்டம் | மேற்கு வங்காளம் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 9 வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | வாகன பதிவு புத்தக நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 3 | ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 4 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் 1 அசல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் 2 அசல் |
| ம.சா.ஆ 6 | கால் வெட்டி எடுக்கப்பட்டதற்கான புகைப்படம் அசல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ ரசீதுகள் (ரூ.12,505/-) |
| ம.சா.ஆ 8 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 9 | மத்திய அரசால் வழங்கப்பட்ட ஊனச்சான்று அடையாள அட்டை நகல் |
| நி.ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

மனுதாரருக்கு தமிழ் தெரியாது என்பதால் வழக்கறிஞர் நதுலால் ஜீவன் மூலம் மொழி பெயர்க்கப்பட்டு குறுக்கு விசாரணை பதிவு செய்யப்படுகிறது. விபத்து ஊத்துக்கோட்டை வட்டம், தானாக்குளம் கிராமம் மெயின் ரோட்டில் 12.10.2022 அன்று இரவு 7.30 மணியளவில் நான் எனது நண்பர் ஓட்டிய இருசக்கர வாகனத்தில் பின்னாடி அமர்ந்து சென்றபோது எங்களது வாகனத்தின் பின்னால் வந்த ஆந்திர மாநில் பேருந்து எங்களது வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பின்னர் ஜிப்மர் மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றேன். அங்கு எனது வலது கால் முட்டிக்கு மேல் வரை வெட்டி எடுத்துவிட்டார்கள். 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் சென்ற வாகனத்தை ஓட்டிச்சென்ற பிரசாந்த் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். முதலுதவி சிகிச்சை பெற்றதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ விடுவிப்பிற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மருத்துவ செலவிற்கான ரசீதுகளை நான் தாக்கல்

செய்துள்ளேன். எனக்கு சர்க்கரை நோய் எதுவும் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் நான் நெல் நடவு வேலை செய்தேன். எனது வயது வருமானம் குறித்து நான் எனது ஆதார் அட்டை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். விபத்து எனது கவனக்குறைவால் நடந்தது என்றும் பேருந்தின் ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுநர் தான் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் பேருந்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார்.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி